# மொழிபெயர்ப்பு விருதுகள் வழங்கல்

நமது நிருபர்

**புது தில்லி, டிச. 30:** 2020–ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமியின் சிறந்த மொழிபெயர்ப்புக்கான விருதுகள் தில்லியில் வியாழக் கிழமை வழங்கப்பட்டன.

தில்லியில் உள்ள சாகித்திய அகாதெமி வளாக அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மொழிபெயர்ப்பு விருதுகள் வழங்கப்பட்டன. சாகித்திய அகாதெமி தலைவர் சந்திரசேகர் கம்பார், விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு ரூ. 50ஆயிரம் தொகைக்கான காசோலை உள்ளிட்ட விருதுகளை வழங்கினார். துணைத் தலைவர் மாதவ் கௌசிக், சாதித்திய அகாதெமி செயலர் சீனிவாசராவ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ரவீந்திரநாத் தாகூரின் 'கோரா' நாவலை தமிழில் மொழி பெயர்த்ததற்காக பேராசிரியர் கா. செல்லப்பனுக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், தவிர்க்கமுடியாத காரணங்களால், அவரால் விழாவில் நேரில் கலந்து கொள்ள இயலவில்லை. அதே போன்று, ஹிந்தியில் திருக்குறளை மொழி பெயர்த்தமைக்காக டி.இ.எஸ். ராகவனுக்கும் இந்த விருது வழங்கப்பட்டது. இதே போன்று, மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம், டோக்ரி, போடோ என பல்வேறு மொழிகளில் எழுத்தாளர்களுக்கு மொழி பெயர்ப்பு விருதுகள் வழங்கப்பட்டன.



தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஹிந்தியில் திருக்குறளை மொழிபெயர்த்தமைக்காக டி.இ.எஸ். ராகவனுக்கு சாகித்திய அகாதெமி விருதை வழங்குகிறார் சாகித்திய அகாதெமியின் தலைவர் சந்திரசேகர் கம்பார்.

# எழுத்தாளர் அம்பைக்கு சாகித்திய அகாதெமி விருது

நமது நிருபர்

**புது தில்லி, டிச. 30:** எழுத்தாளர் அம்பைக்கு (சி.எஸ். லட்சுமி) 2021-ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது. 'சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை' எனும் அவரது சிறுகதைத் தொகுப்பு இந்த விருது கிடைத்துள்ளது.

இந்த விருதுடன் அவருக்கு அடுத்த ஆண்டு பிப்ரவரியில் நடைபெறும் விழாவில் ரூ. 1 லட்சத்துக்கான காசோலையும், பட்டயமும் வழங்கப்பட உள்ளது. இலக்கிய உலகில் சிறந்த படைப்புகளுக்கான உயரிய விருதாக சாகித்திய அகாதெமி கருதப்படுகிறது. 2021-ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது தில்லியில் வியாழக்கிழமை நடைபெற்ற சாகித்திய அகாதெமியின் செயற்குழுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. இந்தக் கூட்டம் சாகித்திய அகாதெமி தலைவர் சந்திரசேகர் கம்பார் தலைமையில் நடைபெற்றது. இதில், செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தின்போது, தமிழ் உள்பட 20 மொழிகளைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்கு விருது அறிவிக்கப்பட்டது. கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், வரலாறு, தன்வரலாறு, நாடகம், விமர்சனம், இதிகாச கவிதை ஆகிய பிரிவுகளில் இந்த விருதுகள் அறிவிக்கப்பட்டன. மலையாள மொழியில் ஜார்ஜ் ஓனக்கூர் எழுதிய 'ஹிருதய ராகங்கள்' எனும் சுயசரிதைக்கும், கன்னடத்தில் டி.எஸ்.நாகபூஷணா எழுதிய 'காந்திய கதனா' எனும் வாழ்க்கை சரிதைக்கும், தெலுங்கில் கோரட்டி வெங்கண்ணா எழுதிய 'வெல்லங்கிட்டானம்' எனும் கவிதைத் தொகுப்புக்கும் விருது கிடைத்துள்ளது.



அம்பை (சி.எஸ். லட்சுமி), மு.முருகேஷ்.

சாகித்திய அகாதெமியின் யுவ புரஸ்கார் விருதும், பால சாகித்திய புரஸ்கார் விருதும் அறிவிக்கப்பட்டது. தமிழில் மு.முருகேஷ் எழுதிய 'அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை' எனும் சிறுகதைத் தொகுப்புக்கு பால சாகித்திய புரஸ்கார் விருது கிடைத்துள்ளது.

சாகித்திய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் அம்பை, 'சிறகுகள் முறியும்' எனும் முதல் தொகுப்பையும், அதைத் தொடர்ந்து, 'வீட்டின் மூலையில் ஓர் சமையல் அறை' உள்ளிட்ட பல சிறுகதை தொகுப்புகளையும் எழுதியுள்ளார். இவர், 1966-இல் இருந்து தொடர்ந்து எழுதி வருகிறார். சாகித்திய அகாதெமி விருது அறிவிக்கப்பட்டிருப்பது குறித்து அவர் தினமணி நிருபருக்கு அளித்த பேட்டி:

இந்த விருது கிடைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. சுந்தர ராமசாமி, ஞானகூத்தன், வெங்கட் சாமிநாதன் போன்ற மூத்த எழுத்தாளர்களுக்கு கிடைக்காமல் இந்த விருது தற்போது எனக்குக் கிடைத்திருப்பது கூச்ச உணர்வைத் தருவதாக உள்ளது. ஆனால், அங்கீகாரம் கிடைத்திருப்பது மகிழ்ச்சிதான். அதேவேளையில், விருது கிடைக்கும் என்று நினைத்து ஒரு போதும் புத்தகம் எழுதியதில்லை. மனதில் இருக்கும் சில எண்ணங்களைப் பகிர, பொது வெளியில் வைக்க வேண்டும் எனும் ஆவலில் எழுதுகிறேன். இந்த விருது எனது எழுத்துப் பணிக்குக் கிடைத்த அங்கீகாரம் எனக் கருதுகிறேன் என்றார் அவர்.

## முதல்வர் வாழ்த்து

**சென்னை, டிச. 30:** சாகித்திய அகாதெமி விருது பெற்ற தமிழ் படைப்பாளிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, வியாழக்கிழமை அவர் வெளியிட்ட வாழ்த்துச் செய்தி:

'சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை' என்ற சிறுகதைத் தொகுப்புக்காக சாகித்திய அகாதெமி விருது விருதைப் பெற்ற எழுத்தாளர் அம்பைக்கு வாழ்த்துகள். தமிழில் பல ஆண்டுகளுக்குப் பிறகு பெண் எழுத்தாளருக்கு விருது அறிவிக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். பெண் படைப்பாளிகளுக்கு இது மேலும் ஊக்கமளிக்கும்.

'அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை' என்ற படைப்புக்காக பால சாகித்ய புரஸ்கார் விருதை மு.முருகேஷ் பெற்றுள்ளார். சிறார்களுக்கான எளிய, இனிய படைப்புகள் தமிழில் செழித்திட இந்த விருது ஊக்கம் அளிக்கட்டும் என்று தெரிவித்துள்ளார்.

# எழுத்தாளர் அம்பைக்கு ‘சாகித்ய அகாடமி’ விருது

● ‘பால சாகித்ய புரஸ்கார்’ விருதுக்கு மு.முருகேஷ் தேர்வு

■ சென்னை

தமிழில் சிறந்த இலக்கிய படைப்புக்காக 2021-ம் ஆண்டின் சாகித்ய அகாடமி விருதுக்கு அம்பை தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவில் பல்வேறு மொழிகளிலும், ஆங்கிலத்திலும் வெளியாகும் சிறந்த இலக்கியப் படைப்புகளுக்கு சாகித்ய அகாடமி சார்பில் ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்படுகின்றன. அந்த வகையில் 2021-ம் ஆண்டுக்கான விருது பெறுவோர் பட்டியல் புதுடெல்லியில் நேற்று அறிவிக்கப்பட்டது.

அம்பை எழுதிய, ‘சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை’ என்ற சிறுகதை தொகுப்புக்கு தமிழுக்கான சாகித்ய அகாடமி விருது கிடைத்துள்ளது. 2019-ல் வெளியான இந்தச் சிறுகதை தொகுப்பை காலச்சுவடு பதிப்பகம் வெளியிட்டுள்ளது. அம்பையின் இயற்பெயர் சி.எஸ்.லட்சுமி. 1944-ல் கோவையில் பிறந்தவர்.

தமிழின் மிகச் சிறந்த படைப்பாளர்களில் அம்பையும் ஒருவர். ‘சிறகுகள் முறியும்’, ‘வீட்டின் மூலையில் ஒரு சமையலறை’, ‘காட்டில் ஒரு மான்’, ‘வற்றும் ஏரியின் மீன்கள்’, ‘அந்தேரி மேம்பாலத்தில் ஒரு சந்திப்பு’ உள்ளிட்டவை அம்பையின் முக்கியமான நூல்கள்.

“பெண் யாருக்கும் உடைமைப் பொருள் அல்ல; தனக்கென்று தனி விருப்பங்களும், சுயமரியாதையும் கொண்டவள் பெண்” என்பதை



▲ அம்பை

அம்பையின் படைப்புகள் வலியுறுத்துகின்றன. சென்னையிலும், டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலை.யிலும் படித்தவர். தற்போது மும்பையில் வசித்து வருகிறார். பெண்களுக்காக ‘ஸ்பாரோ’ என்ற அமைப்பை நடத்தி வருகிறார்.

எழுத்தாளர்கள் எஸ்.சண்முகம், பா.வெங்கடேசன், கலாப்ரியா, எம்.கோபாலகிருஷ்ணன், சு.வேணுகோபால், சுப்ரபாரதிமணியன், எஸ்.வைத்தீஸ்வரன், அம்பை, பெருந்தேவி, ஆலந்தூர் கோ.மோகனரங்கன், மு.கவிமதி ஆகியோரின் நூல்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாகவும், இதில் எழுத்தாளர் அம்பை எழுதிய, ‘சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை’ என்ற சிறுகதை தொகுப்பு விருதுக்கு தேர்வு செய்யப்பட்டதாகவும் சாகித்ய அகாடமி அறிவித்துள்ளது. தமிழ் விருதுக்குரிய நூல்களைத் தேர்வு செய்யும் நடுவர் குழுவில் கே.முத்துகிருஷ்ணன்,



▲ மு.முருகேஷ்

இமையம், ராமகுருநாதன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

விருதுக்குத் தேர்வு செய்யப்பட்ட படைப்பாளிகள் ஒவ்வொருவருக்கும் ரூ.1 லட்சத்துக்கான காசோலை, சால்வை, செப்பு பட்டயம் அடங்கிய சாகித்ய அகாடமி விருது வழங்கப்படும். விருது வழங்கும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

### மு.முருகேஷுக்கு விருது

கவிஞர் மு.முருகேஷ் எழுதிய, ‘அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை’ என்ற சிறுகதை தொகுப்புக்கு 2021-ம் ஆண்டுக்கான ‘பால சாகித்ய புரஸ்கார்’ விருது அறிவிக்கப்பட்டுள்ளது. 1969-ல் புதுக்கோட்டையில் பிறந்த முருகேஷ், சிறுகதை, கவிதை, கட்டுரைகளை எழுதிவருகிறார். சிறுவர் இலக்கியங்கள் படைப்பதில் சிறப்பு கவனம் செலுத்திவரும் அவர், தற்போது ‘இந்து தமிழ் திசை’ நாளிதழில் முதுநிலை உதவி ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். இந்த விருதுடன் ரூ.50 ஆயிரத்துக்கான காசோலை, செப்புப் பட்டயம் வழங்கப்படும்.

சாகித்ய அகாடமி வழங்கும் தமிழ் மொழிக்கான 2021 ‘யுவ புரஸ்கார்’ விருது பின்னர் அறிவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து

சாகித்ய விருது பெற்ற எழுத்தாளர் அம்பை, பால சாகித்ய புரஸ்கார் விருது பெற்ற கவிஞர் மு.முருகேஷ் ஆகியோருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட ட்விட்டர் செய்தியில், “தனது ‘சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை’ என்ற சிறுகதைத் தொகுப்புக்காக சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் அம்பைக்கு வாழ்த்துகள். தமிழில், பல ஆண்டுகளுக்குப் பின், பெண் எழுத்தாளருக்கு விருது அறிவித்திருப்பதை வரவேற்கிறேன். பெண் படைப்பாளிகளுக்கு இது மேலும் ஊக்கமளிக்கட்டும்.

கவிஞர் மு.முருகேஷின் ‘அம்மாவுக்கு மகன் சொன்ன உலகின் முதல் கதை’ என்ற படைப்புக்காக ‘பால சாகித்ய புரஸ்கார்’ விருது பெற்றமைக்கு வாழ்த்துகள். சிறார்களுக்கான எளிய - இனிய படைப்புகள் தமிழில் செழித்திட இந்த விருது ஊக்கம் அளிக்கட்டும்” என்று குறிப்பிட்டுள்ளார்.